ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,608 — 1958 දෙසැම්බර් 5 වැනි සිකුරාදා — 5.12.1958

11,608 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

## உபவிதிகள்

L.G.D.—GC. 14/47

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்கீழ் புத்தளம் மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுக் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் (புரட்டாதி) மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கஸெற்" றில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பெற்ற அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு தம்மீதுவைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி கலாசார விவகார அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள்.

வி. சி. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர்மீ 24 ந் உ.

#### உபவிதிகள்

#### வாகன, மிருகவரி

1. (1) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி திரட்டப்படும் வாகன, மிருக வரியின் பொருட்டு, அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான பத்திரத்தின் மாதிரியில் ஒரு விபர அட்டவணையை தலைவரிடம் கொடுக்கவேண்டும்.

(2) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி வரி செலுத்தப் பாத்திரப்பட்டவர்கள், 1959 ம் ஆண்டுக்கான அட்டவணையை எழுதி நிரப்பி 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதிக்குமுன்னர் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும், இனிவரும் எந்த வருடத்துக்கும் அத்தகைய அட்டவணை தரும்படி கேட்கப்பட மாட்டார்.

2. சட்டத்தின் 47 ம் (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணை கொடுத்த ஒவ்வொருவரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1959 ம் வருடத்துக்கு அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும், அவ்வருடத்து மார்ச் மாதம் 31 ந் திகதிக்கு முன்னர் வரி கொடுக்கவும்.

(ஆ) இனிவரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள், மிருகங்களில் இனிவரும் அந்த வருடத்தில் முப்பது நாட்களுக்குமேல், தமது சொந்தத்தில் பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருப்பனவற்றுக்கு அவ்வருடம் மார்ச் மாதம் முப்பத்தோராந் திகதிக்குமுன்னர் வரி கொடுக்கவும் பாத்திரராவார்.

3. எவரேனும் 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்தபின்னர், அந்த அட்டவணையில் சொல்லப்படாததும் சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது 2 ம் உபவிதியின்படி அட்டவணை எதுவும் கொடுக்காத எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் வாங்கிய அல்லது வைத்திருக்க வேணும் உபயோகிக்கவேணும் தொடங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அவ்விதம் வாங்கியதை அல்லது உபயோகிப்பதைக் குறித்து தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில் எழுத்து மூலமான விபர அறிக்கை ஒன்றையும் கொடுக்கவேண்டும்.

4. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கை கொடுக்கும் ஒவ்வொருவரும் அந்த அறிக்கை எந்த வருடத்தில் கொடுக்கப்படுகின்றதோ அந்த வருடத்துக்கும் அதற்குப் பின்வரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள, அவருடைய சொந்தத்தில் பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கும், வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அதன்பொருட்டு அவருக்கு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரி கொடுக்கப் பாத்திரராவார்.

5. (1) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர், அந்த அட்டவணையில் அல்லது அறிக்கையில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரிகொடுக்கும் பாத்தியதையிலிருந்து தவிர்த்துவிடும்படி சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருதற்கான காரணங்களைக்காட்டி தவிர்த்துவிடுதற்கான தமது கோரிக்கை பற்றி தலைவருக்கு உடனே எழுத்தில் அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(2) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர் எந்த வாகனத்தையேனும் அல்லது மிருகத்தையேனும் ஆட்சிபண்ணுமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விடும் ஒவ்வொருவரும், அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தாம் ஆட்சிபண்ணுமல், வைத்திருக்காமல், விட்டுவிட்டதாக உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

6. எவரேனும் வரிகொடுத்ததும், வரிகொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாகனத்துக்கும் இதன் "ஆ" அட்டவணையில் காட்டியுள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக்காட்டும் எழுத்துக்களில் அந்த வாகனத்துக்கேற்ற எழுத்துக்களையும் அது எந்த வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவு இடாப்பில் உள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத்தகடு ஒன்றை தலைவர் கொடுக்கவேண்டும். அத்தகடு எதுவும் பாவிப்பினலாவது அல்லது வேறு விதத்திலாவது தெளிவாகத் தெரியாது போனால் அல்லது உருவழிந்துபோனால் அதன் சொந்தக்காரர் தலைவரிடம் அதைத் திருப்பிக்கொடுத்து ஐம்பது சதமும் கட்டினால் புதிய தகடு ஒன்றைப் பெறும் உரித்துள்ளராவார்.

7. ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது ஒவ்வொரு வாகனத்துக்கும் பொறுப்பாளியாயிருப்பவர் 6 ம் உபவிதியின்படி அந்த வகானத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஒரு பாகத்தில் மாட்டிவைக்கவேண்டும்.

8. ஏதேனுமொரு தெரு அல்லது பாதை வழியாகச் சென்றுகொண்டிருக்கும் எந்த வாகனத்தையும், அந்த வாகனத்தில் மாட்டி வைக்க வேண்டுமென்று 7 ம் உபவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற்பொருட்டு தலைவரேனும் அல்லது தலைவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தவரேனும் நிறுத்து

வதும் மறித்துவைப்பதும் நீதியாகும். அந்த வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி தலைவராலாவது அல்லது அத்தகைய வேறு உத்தியோகத்தர் எவராலுமாவது கேட்கப்படுங்கால் அந்த வாகனத்தை நிறுத்தி, அவரை அத்தகட்டைப் பார்வையிட அனுமதிக்கவேண்டும்.

9. புத்தளம் மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுக் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு 1941 ம் ஆண்டு ஆடி மாதம் 18 ந் திகதி வெளியான 8,765 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வாகன மிருகவரி பற்றிய உபவிதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

10. இந்த உபவிதிகளில்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும்.

" சங்கம் " என்பது புத்தளம் மாவட்ட அக்கரைப்பற்றுக் கிராமச் சங்கம் எனப்பொருள்படும்.

" சட்டம் " என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப் பொருள்படும்.

" அ " அட்டவணை

பத்திரம்

அக்கரைப்பற்றுக் கிராமச் சங்கம்

வாகன மிருகவரி பற்றிய உபவிதிகளின் தாற்பரியப்படி கொடுக்க வேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் அறிக்கை

சொந்தக்காரரின் பெயர் : ————.

வட்டார இலக்கம் : ————.

கிராமம் : ————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது இரண்டினதும் விபரம் | வார்த்தைகளில் எண்ணிக்கை | குறிப்புகள் (துவிச்சக்கர வண்டியாயின் உற்பத்தியாளரின் இலக்கத்தைத் தருக) |
|---|---|---|
| பாரவண்டிகள், பிரயாண வண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இன வண்டிகளும் .. .. | | |
| இரட்டை மாட்டு பாரவண்டிகள் அல்லது பிரயாணவண்டிகள் .. | | |
| ஒற்றை மாட்டு பாரவண்டிகள் அல்லது பிரயாணவண்டிகள் .. | | |
| றிக்ஷோக்கள் .. | | |
| கைவண்டிகள் .. | | |
| சைக்கிள்கள் .. .. | | |
| யானைகள் .. .. | | |
| குதிரைகள் .. .. | | |
| கோவேறு கழுதைகள் .. | | |
| கழுதைகள் .. .. | | |

எனக்குத் தெரிந்தவரையில், மேற்படி அறிக்கை உண்மையானதென்று நான் உறுதிகூறுகிறேன்.

————,
சொந்தக்காரரின் அல்லது வைத்திருப்பவரின் கையொப்பம்.

திகதி : ————.

" ஆ " அட்டவணை

| | |
|---|---|
| பாரவண்டி பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | அ. ப. வ. |
| இரட்டைமாட்டு வண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. .. | அ. ப. இ. |
| ஒற்றைமாட்டு பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. .. | அ. ப. ஒ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. .. | அ. ப. றி. |
| கைவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | அ. ப. கை. |
| துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | அ. ப. து. |

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், **சனிக்கிழமைகளில்** மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், **சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும்** பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. ச. | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 25 | |
| | 0 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 10 | |
| | 0 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.